13. அரசு—தனியார் பங்களிப்பு கொள்கை

Industrial Policy *எப்படி இருக்கிறதோ,* Public Private Partnership Policy, *எந்தெந்த அடிப்படையில் என்னென்ன* mode–*ல் ஒன்றிய அரசாங்கம் செய்திருக்கிற மாதிரி, ஒரு* Standard Policy for Public Private Partnership *செய்கிறோம்.*

அதிக மூலதனச் செலவினங்கள் உள்ள திட்டங்களில், அரசு–தனியார் பங்களிப்பு முறையை பொது நிறுவனங்கள் மேற்கொள்ளவும், தமிழ்நாட்டின் கட்டமைப்பு மேம்பாட்டில் தனியார் துறையினரின் பங்கேற்பை ஊக்குவிக்கவும், விரிவான 'அரசு–தனியார் பங்களிப்புக் கொள்கை' ஒன்றை அரசு வகுக்கும்.

இரவு 8–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் விளக்கங்களை ஏற்றுக்கொண்டு அனைத்து உறுப்பினர்களும் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றி 4 துறைகளுக்கும் கோரிய நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

8. சட்டமன்றப் பேரவை/மேலவை முன்னாள் உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் மற்றும் மருத்துவப்படி உயர்வு குறித்த முதலமைச்சரின் அறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து வைத்திருக்கக்கூடிய கோரிக்கையின் அடிப்படையிலே, இப்போது அரசுக்கு இருக்கக்கூடிய நிதிநிலை சூழ்நிலைக்கேற்ப, ஓர் அறிவிப்பை நான் வெளியிட விரும்புகிறேன்.*

இங்கே முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஓய்வூதியத்தையும், மருத்துவப் படியையும் உயர்த்தித் தர வேண்டுமென மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தார்கள். அதனடிப்படையில், பின்வரும் அறிவிப்புகளை அறிவிப்பதில், உங்களோடு சேர்ந்து நானும் ஓரளவிற்கு மகிழ்ச்சி அடைந்து, அவற்றை அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முன்னாள் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரக்கூடிய மாத ஓய்வூதியம் ரூபாய் 25 ஆயிரம் என்பது, ரூபாய் 30 ஆயிரமாக, கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, ஜூன் மாதம் முதல் உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், தற்போது வழங்கப்பட்டு வரக்கூடிய குடும்ப ஓய்வூதியம் மாதம் ஒன்றிற்கு ரூபாய் 12,500/– என்பது, மாதம் ஒன்றிற்கு ரூபாய் 15 ஆயிரமாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், முன்னாள் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு, தற்போது ஆண்டு ஒன்றிற்கு வழங்கப்பட்டுவரும் மருத்துவப் படி 50 ஆயிரம் ரூபாய் என்பது, 75 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்து, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(இ) கோரிக்கை எண் 36 — திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை
(ஈ) கோரிக்கை எண் 38 — பொதுத் துறை
(உ) கோரிக்கை எண் 1 — மாநில சட்டமன்றம்
(ஊ) கோரிக்கை எண் 2 — ஆளுநர் மற்றும் அமைச்சரவை
(எ) கோரிக்கை எண் 16 — நிதித் துறை
(ஏ) கோரிக்கை எண் 35 — மனிதவள மேலாண்மைத் துறை
(ஐ) கோரிக்கை எண் 50 — ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை. மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*